**சிலுவைப் பாதை** **(லெனின் சே.ச.)**

இயேசு தான் மேற்கொண்ட பயணங்கள் எண்ணிலடங்கா ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக மானுடம் மீட்க தன்னையே அளிக்க மேற்கொண்ட பயணம் அவரது சிலுவைப் பயணம். உலகத்தின் மிகச்சிறந்த மொழிகள் சொல்லாததை சமயங்கள் பல விளக்காததை, உலகின் தத்துவங்கள் பல புரிய வைக்காததை இரண்டு மரத்துண்டுகளால் ஆன சிலுவை உலகுக்கு உணர்த்துகிறது. இது வெறும் மரச்சிலுவை அல்ல மனித மனங்களில் மாற்றத்தைக் கொணரும், மானுட சமூகத்தின் மேல் கொண்ட அன்பின் மொழி. **"ராஜ குமாரர்களின் மணிமகுடங்களை விட தேவ குமாரனின் முள்மகுடம் மனுகுலம் மீட்கும்".** படித்தவனுக்கும் பாமரனுக்கும், பணக்காரனுக்கும் பசியால் வாடுபவனுக்கும் பரமனின் பாசத்தை உணர்த்தும் உன்னத மொழி. மனிதம் புனிதம் அடைய அவமானச் சின்னமான சிலுவை அகில உலக மீட்பின் சின்னமானது. இந்த வாழ்வளிக்கும் கல்வாரிப் பயணத்தில் பங்கு பெற வந்திருக்கும் நாம் நமது இதயக் கதவுகளை திறந்து வைப்போம். கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூர்ந்து மனம் வருந்தி, அழுது புலம்பி, ஒறுத்தல் முயற்சிகள் மேற்கொண்டு, நம்மையே வருத்திக் கொள்வதை விட உயிர்ப்பின் உன்னத கிறிஸ்துக்களாக மாற நம்மையே திருத்திக்கொள்ள இறையருள் வேண்டுவோம். கல்வாரி நாயகனின் கரங்களைப் பற்றிக் கொள்வோம். இயேசுவின் உணர்வினை நமதாக்கி அவரின் பாதச்சுவடுகளில் நம் பயணத்தைத் தொடர்வோம்.

## இயேசுவின் பாடுகளின் முதல் நிலை

**ஆண்டவரின் அன்பு மகனுக்கு அரசியல் அதிகாரம் தீர்ப்பிடுகிறது**

**திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.**
**இறை வார்த்தை: யோவான் (19:16)**

**பிலாத்து அவரைச் சிலுவையில் அறையுமாறு அவர்களிடம் ஒப்புவித்தான்.**

மனிதனின் தீர்ப்பு

இறைவனின் சிலுவைச்சாவு

இறைவனின் அன்பு

மனிதனின் விடுதலை வாழ்வு

தீர்ப்பு வாழ்வை அழிக்கிறது

அன்பு வாழ்வை மீட்கிறது.

**சிந்தனை**

**தீர்ப்பிடாத உத்தமருக்கு அநியாயத் தீர்ப்பு!** தீர்ப்பு என்பது திருந்தி வாழ்வதற்கு என்பதை உணர்ந்த இயேசு பாவிகளையும், பகைவர்களையும் தீர்ப்பிடாமல் மன்னித்தார். ஏனெனில் அன்பு தீர்ப்பிடாது. குற்றவாளிகளையே தீர்ப்பிடாத இயேசுவுக்கு சிலுவைத் தீர்ப்பு. இலட்சங்களுக்கு அடிபணியாமல் இலட்சியத்தை முன்னெடுக்கும் ஒவ்வொரும் மரணத்தை மார்தழுவிக் கொள்வது இயல்பான ஒன்றுதானே! தீரம் விசாரித்து தீர்ப்பிடாமல் தீர்ப்பிட்ட பிறகே விசாரனைகள் கண்விழிக்கின்றன. உண்மைக்கு எதிராய் ஊமையாகிப் போகும் பொய்மை எப்போதும் கையிலெடுப்பது அநியாயத் தீர்ப்பு. இன்றைக்கு எத்தனை எத்தனை அநியாயத் தீர்ப்புகள். அதிகாரத்தால் நீதியை விலை பேசி பொய்ப் பிரச்சாரங்களால் நீதிமான்களை வஞ்சிப்பது வாடிக்கையாகி விட்டது. சமூக அவலங்களுக்கெதிராய் குரல்கொடுக்கும் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் அற்புத பரிசு அநீதியான தீர்ப்பு. தீர்ப்புகள் திருத்தப்படாத வரை நியாயமான போராட்டங்கள் கண் உறங்குவதில்லை.

**ஜெபம்:** தீர்ப்பிடாதீர்கள் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டீர்கள் என்று மொழிந்த ஆண்டவரே! உண்மையை உணராமல் பொய்மைக்குப் போர்க் கொடி தூக்கி நீதிமான்களை அநியாயமாகத் தீர்ப்பிட்டதற்காக மனம் வருந்துகிறோம். எங்களை அநீதமாகத் தீர்ப்பிடுபவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ள அருள் தாரும் இயேசுவே ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**
**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

## இயேசுவின் பாடுகளின் இரண்டாம் நிலை

**சிலுவைச் சுமையால் சிவந்த தோள்கள்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: யோவான் (19:17)**

**இயேசு சிலுவையைத் தாமே சுமந்து கொண்டு மண்டை ஓடு என்னும் இடத்திற்குச் சென்றார்.**

மரங்களாகும் மனிதர்கள் மத்தியில்

மானுட விடுதலைக்காய்

மானிட மகன் சிலுவையோடு சிலுவையாகிறார்

**சிந்தனை**

சிலுவையின் மொழி கூறும் அர்த்தங்கள் ஆயிரம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அருவருக்கத்தக்க பாவத்தின் சின்னமான சிலுவை இன்று மீட்பின் சின்னமாக, அருளின் சின்னமாக, அன்பின் சின்னமாக, மன்னிப்பின் சின்னமாக விளங்குகிறது. பரமனின் கரங்கள் பட்டால் மனிதம் புனிதமாகும் பாவமும் பரிசுத்தமாகும். நாம் ஒவ்வொருவரும் நம் அன்றாட வாழ்வில் எத்தனையோ சிலுவைகளை சுமந்து கொண்டிருக்கிறோம். சாதி, மதம், இனம், மொழி என பல சிலுவைகளை இந்தச் சமூகம் நம்மை கட்டாயப்படுத்தி சுமக்க வைக்கிறது. அன்பின் மிகுதியால் சில சிலுவைகளை நாம் விரும்பிச் சுமக்கிறோம். நான் என்ற ஆணவச் சிலுவையை, ஆண் என்ற அகங்காரச் சிலுவையை, பதவி என்ற அதிகாரச் சிலுவையைச் சுமந்து கொண்டிருக்கிறோம். இந்த சுயநலச் சிலுவைகளை உடைத்து மனித நேயம் காக்க, மனித மாண்பை நிலை நிறுத்தும் சமூகச் சிலுவைகளை தன்னலம் துறந்து விரும்பிச் சுமப்போம். இயேசுவின் வழியிலே சிலுவை சுமையல்ல சுகம்.

**ஜெபம்:** என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்து தன் சிலுவையைச் சுமந்து என்னை பின்செல்லட்டும் என்று மொழிந்த அன்பு இயேசுவே! புனித இஞ்ஞாசியார் சிலுவை சுமந்து செல்லும் இயேசுவோடு தன்னை இணைத்துக் கொள்ள அன்னை மரியிடம் அருள் கேட்டது போல மீட்பின் பயணத்தில் சிலுவை பிரிக்க முடியா அங்கம் என்பதை உணர்ந்து நாங்களும் எங்கள் அன்றாடச் சிலுவையையும் சமூகச் சிலுவையையும் சுமக்க அருள் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் மூன்றாம் நிலை**

**விழுந்தாலும் வீழ்வதில்லை இலட்சியங்கள்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: யோவான் (15:16)**

**இவற்றுக்குப் பின் நான் திரும்பிவந்து விழுந்து கிடக்கும் தாவீதின் கூடாரத்தை மீண்டும் எழுப்புவேன்.**

இலட்சிய வீரன் எழுவதற்காக விழுகிறான்

உடல் தளர்ந்து போனாலும்

உள்ளம் தளர வில்லை

தரணி காக்க

நெஞ்சில் உறுதியுடன் எழுகிறார் இயேசு…

**சிந்தனை**

உலகப் பாவங்களின் மொத்த சுமையையும் ஒத்தை மனிதராய் சுமந்த இயேசு சிலுவையின் பாரம் தாங்காமல் மண்ணை முதல் முறை முத்தமிடுகிறார். தாவீது மகனுக்கு ஓசன்னா என்று பாடிய கூட்டம் பரமன் இயேசுவின் உடலில் சிலுவையை சுமத்துகிறது. அவரின் கால்களுக்கு மலர்களைத் தூவி வரவேற்ற கூட்டம் கரடு முரடான மலைப் பாதையில் சிலுவை சுமக்க வைக்கிறது. பாவப்பட்ட மனித குல மீட்புக்காய் நான் விழுவதில் பெருமை கொள்கிறேன். ஆனால் இந்த மனித குலம் இன்னும் யாரை விழச் செய்வது, யாரை கவிழ்ப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்களே எனக் கண் கலங்குகிறார் இயேசு. வாழ்க்கையில் சரிவுகளும் வீழ்ச்சிகளும் நம்மை வீழ்த்துவதற்கல்ல மாறாக வீழ்ச்சியிலும் எழுச்சி கொள்ள இறைவன் தரும் அனுபவக் கல்வி காலத்தால் மறக்க முடியாதது. வரலாற்றால் மறைக்க முடியாதது.

**ஜெபம்:** மதத்தின் பெயரால் மனித மாண்பினை வீழ்ச்சியடையச் செய்யும் சக்திகளுக்கெதிராக வீறு கொண்டெழுந்திடும் இயேசுவைப் போல நாங்களும் எங்கள் வாழ்வில் மனித மாண்பைச் சிதைக்கும் சித்தாந்தங்களுக்கு இடம் கொடாமல் மனித பலவீனத்தால் விழுந்தாலும் இறை வல்லமையால் மீண்டும் எழுந்து உமது இறையாட்சிப் பாதையின் அடிச்சுவட்டில் எங்களது பயணத்தைத் தொடர அருள் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் நான்காம் நிலை**

**கருவில் சுமந்தவளை கண்ணீரோடு சந்திக்கும் இயேசு**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: மத் (15:4 )**

**உன் தந்தையையும் தாயையும் மதித்து நட தந்தையையோ தாயையோ சபிப்போர் கொல்லப்பட வேண்டும்.**

இரத்தத்தை பாலாகக் கொடுத்த அன்னை
இரத்தக்கறை படிந்த தன் மகனை
பயணத்தின் பாதையில் சந்திக்கிறாள்
பரிவுடனே பரமனை தழுவுகிறாள்

**சிந்தனை**

குழந்தையின் முதல் உலகம் அம்மா. அம்மா என்ற வார்த்தைக்குள் அளவில்லா ஆனந்தம் புதைந்திருக்கும். இந்த பிரபஞ்சமே தாயிட்ட பிச்சையன்றோ! அகிலத்தைப் படைத்த ஆண்டவன் கூட தாய்மைக்குப் பணிந்து தானே தண்ணீரைத் திராட்சை இரசமாக்கினார். அகில உலகத்தின் மீட்பரை, படைப்பின் தேவனை அவர் படைத்த மனிதர்களே பலியிடத் துடிப்பது எத்துணை வேடிக்கையாயிருக்கிறது. பலிகளை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்றவரை இரக்கமின்றி பலியிடத் துடிக்கும் இந்தக் கூட்டத்தைக் கண்ட அன்னை எத்துணை துயருற்றிருப்பாள். பரலோகப் பிதாவை பாவிகளின் கையில் ஒப்புவித்துவிட்டு பரமனின் கண்ணீரைத் துடைக்க முடியாமல் மௌனத்தின் மொழியில் உறவாடும் அன்புத் தாயும் தன் வேதனையை வெளிப்படுத்த முடியாமல் சேயும் தவிக்கின்ற காட்சி கண்ணீரின் மொழி.

**ஜெபம்:** உலக மீட்புக்காய் உன்னை இழக்கும் போது உம் கல்வாரி பயணத்தில் ஆறுதலாகவும் தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற துணையாகவும் விளங்கினாள் அன்னை மரியா. இன்று கரும்பை ருசித்துவிட்டு சக்கையை துப்புவது போல முதியோர்களை புறக்கணிக்கும் பிள்ளைகள். பெற்றோரின் இருப்பு இறைவனின் ஆசிர் என்பதை உணர்ந்து தாய்மைக்கு தனிப்புகழாரம் சூட்ட தனிப்பெரும் அருள் தருவாய் இறைவா ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**
**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் ஐந்தாம் நிலை**

**உலகின் மீட்பருக்கு கரம் கொடுக்கும் சீமோன்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: லூக்கா (23:26)**

**அவர்கள் சீரேன் ஊரைச் சார்ந்த சீமோனைப் பிடித்து அவர்மேல் இயேசுவின் சிலுவையை வைத்து சுமந்து கொண்டு போகச் செய்தார்கள்.**

ஐந்து அப்பங்களை ஐயாயிரம் பேருக்கு பகிர்ந்தளித்தவருக்கு

பல்வேறு பிணிகளைக் குணப்படுத்தியவருக்கு

இறந்த இலாசரை உயிர்ப்பித்தவருக்கு

உதவி செய்ய சீமோன் கட்டாயப்படுத்தப்படுகிறார்.

**சிந்தனை**

ஜெபிக்கின்ற உதடுகளை விட உதவி செய்யும் கரங்களே சிறந்தது என்பதை இயேசுவுக்கு உதவுவதன் மூலம் சீமோன் பேறுபெற்றவராகிறார். அன்பு உன்னதமானது அதற்கு உவமை சொல்ல எந்த மொழியிலும் வார்த்தை கிடையாது. அன்பின் மிகுதியால் அகிலத்தை அழுத்தும் சிலுவையினை ஆண்டவன் அருளென எண்ணிச் சுமக்கும் இயேசுவுக்கு உதவி செய்ய எத்தனை பேருக்கு வாய்ப்பு கிடைக்கும். தனக்குக் கிடைத்த வாய்ப்பினை சீமோன் சிக்கெனப் பற்றிக் கொண்டார். இன்று நம்மில் எத்தனை பேருக்கு உதவும் மனமிருக்கிறது. சின்னஞ்சிறிய சகோதர சகோதரிகளுக்கு செய்யும் உதவி எனக்கே செய்யும் உதவி என இயேசு மொழிந்தது நினைவில்லையா? நம் மத்தியில் வாழும் வயது முதிர்ந்தோர், சிறுவர்கள், பெண்கள் என சமுதாயத்தில் தேவையில் இருப்போருக்கு செய்யும் உதவி அந்த இயேசுவுக்கே செய்யும் உதவியல்லவா!

**ஜெபம்:** மனித உரிமையை நிலைநாட்ட சமயத்திற்கு எதிராகவும் அரசியல் அதிகாரங்களுக்கு எதிராவும் குரலெழுப்பிய சமூகப் போராளிகள், சமூகம் சுமத்திய சிலுவைகள் மிகுந்த பாரமானாலும் ஏன் இறப்பிற்கே கொண்டு சென்றாலும் பிறருக்காகவும் முழு மானுட விடுதலைக்காகவும் விரும்பிச் சுமப்பதைப் போல, நாங்களும் தன்னலம் துறந்து சமூகத்தின் சிலுவைகளை விரும்பிச் சுமக்க அருள்தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

## இயேசுவின் பாடுகளின் ஆறாம் நிலை

**படைத்த பரமனின் முகத்தைத் துடைக்கும் வீரமங்கை வெரொனிக்கா**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: யோவான் (7:10)**

**நான் சொன்ன எல்லாவற்றையும் என்னிடம் சொன்ன மனிதரையும் வந்து பாருங்கள்.**

எல்லாம் எனக்கெதற்கு

என ஒதுங்கி நின்ற கூட்டத்தில்

எல்லாம் வல்ல இறைவனின்

முகத்தைத் துடைக்க

வீறுகொண்டு எழுந்தால் வெரோனிக்கா!

**சிந்தனை**

சிலுவையின் சுமை தாங்காமல் முள்முடியின் வலி தாங்காமல் நடக்க வலுவின்றி இரத்தமும் சதையுமாய் தள்ளாடி வருகிறார் இறைமகன் இயேசு. தாவீதின் மகனே என்று சொன்ன கூட்டம் ஒரு புறமும், இயேசுவினால் குணம் பெற்ற கூட்டம் மறுபுறமும் அவரின் துன்பத்தை தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, சமுதாயத்தில் பெண் என்று ஒதுக்கித் தள்ளப்பட்ட வெரொனிக்கா இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள். பாவத்தின் நுழைவாயிலாக கருதப்பட்ட பெண் தான் இன்று பாவிகளை மீட்க வந்த இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள். அன்புக்கு அன்னை தெரசா, அழகுக்கு மோனிலிசா என பெண்மையைத்தானே உலகம் சிறப்பாய் நினைவு கூர்கிறது. தாய் மொழி, தாய் நாடு என தாய்மையைத் தானே தரணி போற்றுகிறது. பெண்ணியம் போற்றி புண்ணியம் சேர்ப்போம்.

**ஜெபம்:** நாங்கள் வாழ்வு பெற உம்மை சிதைத்துக் கொண்ட இயேசுவே! சிதைந்து போன உம் முகத்தைத் துடைத்து உமக்கு ஆறுதலாக விளங்கிய வீரப்பெண் வெரொனிக்கா போல சமூகத்தின் அவலங்களால் சிதைந்து, உருக்குழைந்து கிடக்கும் மனித சமூகத்தின் கறைகளை களைந்திட மன உறுதியைத் தாரும். ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**
**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் ஏழாம் நிலை**

**இயேசு இரண்டாம் முறை மண்ணை முத்தமிடுகிறார்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: (பிலி.2:8)**

**மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.**

இயேசுவை வீழ்த்திய கூட்டமும்

விழுந்து கிடக்கும் மானுடமும்

எழுந்து நடக்க

இயேசு இரண்டாம் முறை

மண்ணை முத்தமிடுகிறார்.

**சிந்தனை**

இறையாட்சிக் கனவை நினைவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை மட்டுமே கண்முன் கொண்டிருந்த இயேசுவுக்குப் பாதையில் கிடந்த கல்லும், முள்ளும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. சட்டத்திற்கு மனிதனை அடிமையாக்கி மனிதநேயத்தை மரிக்கச் செய்தவர்கள் மானிட மகனையும் மரணத்தின் பிடியில் சிக்கவைக்க நினைக்கின்றார்கள். சிலுவையின் பளுவைத் தாங்க முடியாமல் இரண்டாம் முறை கீழே விழுந்த இயேசுவின் முதுகினில் பாரச்சிலுவை விழுகிறது, இதனை ஒரு பொருட்டாய் எண்ணாமல் விழுந்த இடத்தில் எழுந்து நடைபோடுகிறார் நம் ஆண்டவர் இயேசு. நம்மில் எத்தனை பேர் தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாமல் துணிவோடு எழுந்து சென்றிருக்கிறோம். வெற்றியும் தோல்வியும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. சமூகப் பிரச்சனைகளுக்காக குரல் கொடுக்கும் ஒவ்வொருவரும் சோதனைகளை சாதனையாக்கிக் கொண்டவர்கள். இவர்கள் மதத்தைக் கடந்த மனிதத்தை மண்ணில் மலரச் செய்பவர்கள். மரித்தாலும் மக்கள் மனதில் நிலைத்து வாழும் இயேசுவின் மறுபிறப்புக்கள்.

**ஜெபம்:** இரக்கத்தின் இறைவா! சவால்களைக் கண்டு சரிந்து விடாமல் துணிவுடன் பயணம் செய்ய எங்கள் துணையாய் வாரும். விழுந்து கிடக்கும் மானுடத்தை தூக்கி நிறுத்த உம் ஆற்றலைத் தாரும். அன்பை அடகுவைத்து அரசியல் நடத்தும் அதிகாரத்தை வேரறுத்து, இறையரசே எம் குடியரசாக அமைய அருள் தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் எட்டாம் நிலை**

**எருசலேம் பெண்களின் கண்ணீருக்கு இரங்கும் இயேசு**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: லூக்கா (23:28)**

**எருசலேம் மகளிரே நீங்கள் எனக்காக அழ வேண்டாம். மாறாக உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.**

பெண்ணுரிமை பேசினாலும்

பெண்ணடிமை ஓயாது

பெண்ணினமே உனை காக்க

ஓரினமாய் கூடிடு

உன் வயிற்றுப் பிள்ளைக்கும்

பெண்ணின் பெருமைதனை சொல்லிடு

பேறுடையாள் பெண்ணென்று

**சிந்தனை**

ஆறுதல் இது வெறும் வார்த்தை அல்ல ஆன்மாவின் ராகம். இமயத்தை வெல்வதை விட இதயத்தை வெல்வது தான் சாதனையின் உச்சம். கசையடியால் தன் உடல் கிழிக்கப்பட்டு இரத்தமும் சதையுமாய் வலுவிழந்து நின்றாலும் தன் இலட்சியத்தில் வலுவுடனே எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறுகிறார் செந்நீர் காவிய நாயகன் இயேசு. இயேசு மனுக்குலத்திற்காய் தன்னை இழப்பதில் கவலை கொள்ளவில்லை அந்நிலையிலும் எருசலேம் பெண்களைப் பார்த்து எனக்காக அழ வேண்டாம் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்கிறார். இன்று இயேசு தந்த அதே ஆறுதலை நம்மால் கொடுக்க முடியுமா? அன்பிற்காய் ஏங்கித் தவிப்பவர்களுக்கு, மருத்துவ மனைகளில் நோயுற்றிருக்கும் சக மனிதனுக்கு, அனாதை இல்லங்களில் குப்பைகளை கொட்டுவது போல கொட்டப்பட்டிருக்கும் முதியோருக்கு நம்மால் ஆறுதலாக இருக்க முடியுமா?

**ஜெபம்:** ஆறுதலின் அன்பு தெய்வமே! இந்த உலகத்தில் நாம் எதைக் கொடுக்கிறோமோ அதையே திரும்பப் பெறுகிறோம் என்பதை உணர்ந்து ஆறுதலுக்காய் ஏங்கி அழையும் உள்ளங்களுக்கு ஆறுதல் தந்திடவும் நீதியற்ற சமூகத்தில் அநீதியாக தண்டிக்கப்படும் பெண்களுக்கு ஆறுதலாக இருந்து சமத்துவ சமுதாயம் காண அருள் புரியும் - ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் ஒன்பதாம் நிலை**

**சிலுவை பாரத்தால் மூன்றாம் முறை மண்ணை முத்தமிடும் இயேசு**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: கொலோசியர் (1:24)**

**உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார்.**

தடுக்கி விழுவது ஒரு ரகம்

தன்மானம் காக்க விழுவது மறுரகம்

மனித குலம் காக்க

மறுபடியும் விழுவது – மகத்துவம்

**சிந்தனை**

பாவத்தினால் விழுந்தோரையும், பிணியினால் மடிந்தோரையும் சமூக அவலங்களினால் சரிந்தோரையும் தூக்கி நிறுத்திய இயேசுவால் நிற்கக் கூட வலுவின்றி சிலுவையின் பாரத்தால் மூன்றாம் முறை கீழே விழுகின்றார். எத்தனை வலிமை படைத்தவர்களாக இருந்தாலும் கடவுள் முன் மண்டியிடாதவர் வாழ்வில் தலைநிமிர்ந்து நிற்பதில்லை என்பதை உணர்த்திடத்தான் இயேசு மூன்றாம் முறை கீழே விழுகிறார். எத்தனை முறை விழுந்தாலும் மீண்டும் மீண்டும் எழுந்து வருவது மீட்பின் அறிகுறியல்லவா? சிலுவையின்றி உயிர்ப்பை எப்படி சுவைப்பது? நம் அன்றாட வாழ்வில் நம் உறவினர்களாலும் சொந்த பந்தங்களாலும் சோதனைக்கு உட்படுத்தப்படட்டாலும் வாழ்வே கேள்விக் குறியானாலும் இவையெல்லாம் நிரந்தரமல்ல. மூன்று முறை விழுந்தாலும் எழுந்து தன் பயணத்தைத் தொடர்ந்த இயேசுவைப் போல நாமும் மீட்பின் பாதையை நோக்கி நம் பயணத்தைத் தொடர்வோம்.

**ஜெபம்:** நம்பிக்கையின் நாயகனே இயேசுவே பல முறை விழுந்தாலும் எழுவதைப் பற்றியே நீ சிந்தித்தாய். எங்களுக்கு ஏற்படும் சின்னஞ்சிறு பிரச்சனைகளைப் பெரிதுபடுத்தாமல் இவையெல்லாம் வாழ்வின் ஓர் அங்கம் என்பதை உணர்ந்து நம்பிக்கை தளராமல் முயற்சி செய்ய அருள்தாரும் - ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**
**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் பத்தாம் நிலை**

**ஆடையின்றி இருந்த மனிதன் இயேசுவின் ஆடைகளை களைகிறான்**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை:˙. லூக்கா (23:28)**

**அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்த பின் குலுக்கல் முறையில் அவருடைய ஆடைகளைப் பங்கிட்டுக்கொண்டார்கள்**

பாவத்தின் விளைவாய்

வந்த ஆடைகளை

பாவிகளே பறித்துக்கொள்கிறார்கள்

**சிந்தனை**

பாவத்தின் விழைவால் தான் ஆடையின்றி இருப்பதை உணர்ந்தார்கள் ஆதிப்பெற்றோர்கள். ஆனால் மனிதனின் மானம் காக்க தன் மானம் இழந்து நிற்கிறார் இயேசு. ஆடை, ஆறடி மனிதனுக்கு மதிப்பு சேர்ப்பவை. தான் படைத்த படைப்புகளின் மத்தியில் படைத்தவனே ஆடையின்றி இருப்பது எத்துணை கொடியது. சமுதாயத்தில் எத்தனை எத்தனை அவமானங்களை நாம் சந்திக்கிறோம். பச்சிளம் குழந்தை முதல் பாடைக்குச் செல்லும் பாட்டி வரையில் வக்கிர சிந்தனையுடைய ஆண்களினால் பெண்களின் மானம் விளையாட்டுப் பெருளாகிப் போனது. ஒவ்வொரு நொடியும் உலகத்தின் எங்கோ ஒரு மூலையில் இயேசுவைப் போல ஆடையின்றி அவமானப்படுத்தப் படுகிறார்கள். பலர் நாகரிகம் என்ற பெயரில் அரை குறை ஆடையணிந்து தன்னையே அவமானப்படுத்திக் கொள்கிறார்கள். கடவுளின் படைப்பில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடில்லை. பிறப்பும் இறப்பும் அனைவருக்கும் சமம் என்றுணர்த்தத்தான் ஆடையின்றி பிறக்கிறோம் ஆடையின்றி புதைக்கப்படுகிறோம்.

**ஜெபம்:** நான், எனது என்ற சுயநல ஆடையை களைந்தெறியவும் சமூகத்தில் ஆடையின்றி இருக்கும் அனாதைகளுக்கு அன்பின் ஆடையாக, கருணையின் ஆடையாக, நம்பிக்கையின் ஆடையாக, மீட்பின் ஆடையாக இருந்து மனித மாண்பை நிலைநாட்ட அருள்புரிவாய் இறைவா ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**
**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

## இயேசுவின் பாடுகளின் பதினோராம் நிலை

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**அகிலத்தின் பாவங்களுக்காய் அறையப்படும் இயேசு**

**இறை வார்த்தை: மாற்கு (15: 24 - 25)**

**அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தனர் அப்போது காலை 9 மணி.**

இந்த உலகம்

ஒருவரை சிலுவையில் அறைந்து விட்டு

கைகூப்பி தொழுகிறது

**சிந்தனை**

சிலுவை வெறும் அடையாளம் அல்ல ஆன்மீகம். அவமானத்தின் சின்னம் ஆண்டவர் இயேசுவால் ஆன்மீகத்தின் அருமருந்தானது. குற்றவாளிகளுக்கு கொடுக்கும் கொடூர தண்டணைகளுள் ஒன்று சிலுவைச் சாவு. பாவத்தின் அடையாளச் சின்னம் இன்று பரிசுத்தத்தின் அடையாளமானது. கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதை இயம்பிடத்தான் இயேசு இந்தச் சிலுவைச் சாவை பரிசாக ஏற்றுக்கொள்கிறார். இவனை சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று அறைகூவலிடும் மதிகெட்ட மாந்தர் கூட்டத்தின் மேல் பரிவு கொள்கிறார் இயேசு. பாவத்தின் சம்பளம் மரணம் ஆனால் பாவமறியா பரமனுக்கும் மரணமா? வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே ஊசலாடும் உயிர் பிரியும் நேரத்திலும் மன்னிக்கிறார் மனிதகுல மீட்புக்காய். அறையப்பட்ட இயேசுவின் உடலில் வழிந்தோடும் செந்நீர் நம் பாவக்கறைகளைக் கழுவட்டும்.

**ஜெபம்:** ஆணிகளில் தொங்கும் அன்பு இயேசு! எங்கள் சுயநல சிந்தனைகளையும், சமூகத்திற்கு எதிராக நாங்கள் செய்த பாவங்களும் ஆணிகளால் அறையப்பட்டு உம் திருஇரத்தத்தால் கழுவப்பட்டு மனமாற்றம் அடைந்தவர்களாய் புதிய சமுதாயம் படைக்க அருள் தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் பனிறெண்டாம் நிலை**

**விண்ணக வாழ்வைத் தொடங்கும் இயேசு**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: யோவான் (19:30)**

**இயேசு எல்லாம் நிறைவேறிற்று என்று கூறி தலைசாய்த்து ஆவியை ஒப்படைத்தார்.**

மண்ணுக்கும் விண்ணுக்கும் பாலமாய்

சிலுவையில் தொங்கிய பரமனாய்

இகத்தின் பழியை தன்மேல் சுமந்து

ஆண்டவன் கையில் ஆவியைக் கொடுத்து – தன்

அன்பினை அகிலம் அறியச் செய்தார்

**சிந்தனை**

அழகிய ஓவியங்களுக்கு பின்னால் காயம்பட்டுக் கிடக்கின்றன ஆணிகளும் சுவர்களும். மானுட மீட்புக்காய் மனுவுரு எடுத்த மாபரன் இயேசுவுக்கு கிடைத்த அற்புத பரிசு சாவு. அதுவும் எவருக்கும் கிடைக்காத அவமானத்தின் சின்னமான சிலுவைச் சாவு. பகைவரையும் அன்புசெய் என்ற பரலோகப் பிதாவுக்கு கிடைத்ததோ! பாரமான சிலுவைச் சாவு. பணமும் பதவியும் இருந்தால் எத்துணை நேர்மையானவரையும் குற்றவாளியாக்கிட முடியும் என்பதற்கு சிறந்த உதாரணம் இயேசுவின் இந்தச் சிலுவைச் சாவு. உண்மையைப் பேசி நன்மையைச் செய்த இயேசுவுக்கு இந்த கொடூரச் சாவு. பாவப்பட்ட உலகத்தில் பரிசுத்தவான்களுக்கு மரியாதை இருக்காதே அதனால் தான் இயேசுவும் முப்பத்தி மூன்று வயதில் தன் மூச்சை நிறுத்திக் கொண்டார். இயேசுவின் இறப்பு நம் பாவத்தின் மீட்பு. நான் மட்டும் வாழ வேண்டும் என்று நினைப்பது பிழைப்பு நாம் அனைவரும் வாழ வழிவகை செய்வது வாழ்க்கை.

**ஜெபம்:** ஒரு பாவமும் அறியா செம்மறியே! இறப்பு என்பது காலத்தின் கட்டாயம். மனித வாழ்வின் அங்கம் என்பதை மனுகுலம் உணர உன்னையே நீ மரித்துக் கொண்டாயே. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையே உள்ள இந்தக் குறுகிய காலத்தில் நீர் விட்டுச் சென்ற விழுமியங்களை வாழ்வாக்கவும் உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகரவும் வரம் தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

**இயேசுவின் பாடுகளின் பதிமூன்றாம் நிலை**

**தாய் மடியில் தலைசாய்க்கும் இயேசு**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: (லூக்கா 2:35)**

**இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்**

படைத்தவரை கருவில் தாங்கிய அன்னை

சிலுவையில் மரித்தவரை மடியில் தாங்கும் நேரம்

**சிந்தனை**

அம்மா இது வார்த்தையல்ல பிரபஞ்சத்தின் உயிர்நாடி. கருவிலே தாங்கி உதிரத்தைப் பாலாக்கி உயிர் போனாலும் உறவோடு வாரி அணைத்துக் கொள்பவள் அன்னை. மாதா, பிதா, குரு, தெய்வம் என அன்னைக்குத் தானே முதலிடம். அன்பின் மொழியை அகிலம் அறியச் செய்தவள் அன்னை. நாம் உயர தன்னை ஏணிப்படியாக்கிக் கொண்டவள் அன்னை. குழந்தையின் மொழியை அன்னையால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். உலகின் மீட்பரை உதிரத்தில் தாங்கிய அன்னையால் உருக்குலைந்த நிலையிலே இயேசுவைக் காண கண்களோ மறுக்குதே. தந்தையின் திட்டத்தில் தானும் ஒரு கருவியாய் இருந்தாலும் பிள்ளையின் நிலையினை எங்ஙனம் தாங்குவால் அன்னை. தினம் தினம் செத்துப்பிழைக்கும் கோழை மகனை அன்னை பெறவில்லை. துணிந்தவனுக்கு தூக்கு மேடை பஞ்சு மெத்தை என மரணத்தை முத்தமிட்ட வீரனையல்லவா பெற்றாள். குழந்தை இயேசுவை மடியில் வைத்து தாலாட்டுப் பாடிய அன்னை சிலுவையில் மரித்த இயேசுவின் உடலை மடியில் கிடத்தி வீரத்தாலாட்டு பாடுகிறார். அன்றுமட்டுமல்ல இன்றும் இயேசுவுக்காய் மறைசாட்சியாய் மரித்துப் போன, சமயத்தைக் கடந்து மனித மாண்பைக் காக்க தன்னுயிர் ஈந்த சமூகப் போராளிகள் ஒவ்வொருவரையும் தன் மடியில் கிடத்தி அன்னை வீரத் தாலாட்டு பாடுகிறாள்.

**ஜெபம்:** தாய்மையின் இலக்கணமே எங்கள் அன்னையே! தாய்மைக்கு நிகர் இவ்வுலகில் எதுவும் இல்லை என்பதை உணர்ந்து எங்கள் தாய்மார்களை போற்றிக் காக்கவும் தாய்மையின் மகத்துவத்தை தரணியெங்கும் பறைசாற்றவும் அருள் தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**

## இயேசுவின் பாடுகளின் பதினான்காம் நிலை

**கல்விக்கூடமாகும் கல்லறை**

திவ்ய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த புகழ்ச்சி செலுத்துகின்றோம். அது ஏனென்றால் பாரமான சிலுவையைத் தூக்கிக்கொண்டு உலகை மீட்டீர்.

**இறை வார்த்தை: மாற்கு (15:46)**

**இயேசுவின் உடலை இறக்கி துணியால் சுற்றி பாறையில் வெட்டப்பட்டிருந்த கல்லறையில் வைத்தனர்**

வரலாறு படித்தவர்களும்

வரலாறு படைத்தவர்களும்

இங்கே தான்

விதைக்கப்பட்டிருக்கிறார்கள்

**சிந்தனை**

கல்லறை காலம் சொல்லும் கடைசிப் பாடம். கால் வயிற்றுக் கஞ்சிக்கு வழி இல்லாதவனும் காலத்திற்கும் சொத்து சேர்த்தவனும் கடைசியில் வந்து சேரும் இடம் கல்லறை. உயர்த்தப்பட்டவனுக்கும் ஆறடி நிலம் தான் தாழ்த்தப்பட்டவனுக்கும் ஆறடி நிலம் தான். உடலில் உயிர் ஒட்டி இருக்கும் வரை தான் மதிப்பும் மரியாதையும், உயர்வும் தாழ்வும், உயிர் பிரிந்தால் எல்லாம் பிணம் என்றாகி விடும். அகிலத்தை படைத்த ஆண்டவர் இயேசுவுக்கு ஆறடி நிலம் இல்லை அவரை அடக்கம் செய்ய. இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும் இன்றைக்கும் பிறப்பிலும் இறப்பிலும் சாதியின் பெயரால் சமத்துவம் சாகடிக்கப்படுகிறது. மனித மனங்களில் சாதி வேண்டாம் மதத்தின் பெயரால் வன்முறை வேண்டாம். இனத்தின் பெயரால் கலவரங்கள் வேண்டாம். ஆறடி நிலப்பரப்பில் அடங்கிப் போகும் உடலுக்கு ஆணவம் எதற்கு? அன்பினை விதைத்து மகிழச்சியை அறுவடை செய்வோம்.

**ஜெபம்:** உயிர்ப்பின் நாயகனே இறைவா! காலத்திற்கு அப்பாற்பட்ட உன்னை காலம் என்ற கல்லறைக்குள் அடக்க முடியுமா? புல்லைப் போல் மனித வாழ்வு மடிந்து போகும் என்பதை உணர்த்த கல்லறைக்குள் அடங்கிப் போனாயோ? காலத்திற்கு கட்டுப்பட்ட நாங்கள் காலத்தின் அறிகுறிகளை உணர்ந்து எங்கள் தன்னல நாட்டங்களுக்கு கல்லறை கட்டி விட்டு இறையாட்சியின் விழுதுகளாகிட வரம் தாரும் ஆமென்.

**எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி - 2**

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தால் நித்திய சமாதானத்தில் இளைப்பாறக்கடவன. ஆமென்.**